# சட்டவாதம்

Transcribed from a message spoken September, 2012 in Chennai

By *R.S. Milton*

## கிறிஸ்தவர்களின் சிக்கல்

சட்டவாதத்தை வரையறுப்பது கடினம். ஆனால், சட்டவாதத்தின் குணாம்சங்களைப் பார்ப்பது எளிது. நல்ல மனிதர்கள், தேவனுக்குப் பயந்தவர்கள், தேவனுடைய வழிகளிலே நடக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் ஆகியவர்களிடையேதான் நாம் சட்டவாதத்தைப் பார்ப்போமேதவிர, தேவனுக்குப் பயப்படாத அல்லது தேவனுடைய வழியிலே நடக்க விருப்பமில்லாதவர்களிடையே நாம் சட்டவாதத் தைப் பார்க்கமாட்டோம். புதிய ஏற்பாட்டில் பரிசேயர்கள் சட்டவாதிகளுக்கு சிறந்த எடுத்துக்காட் டாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசேயர்களுடைய சட்டவாதத்துடன் பெரிய போராட்டம் நடத்தவேண்டியிருந்தது.

நியாயப்பிரமாணத்தின்படி வாழ்வதா அதாவது திருச்சட்டத்தின்படி வாழ்வதா, கிறிஸ்தவர்களுக்கு திருச்சட்டம் பொருந்துமா பொருந்தாதா என்பதுதான் புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் அவர்களுடைய பெரிய போராட்டம். இன்று கிறிஸ்தவர்களுக்கு அந்தப் போராட்டம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்னொரு விதத்தில் கிறிஸ்தவர்களுக்கிடையே சட்டவாதம் இருக்கிற வாய்ப்பு உண்டு.

## இரண்டு வேலைக்காரர்கள்

மத்தேயு 18ஆம் அதிகாரத்தில் வாசிக்கிற உவமை மிகவும் பயனுள்ளது. ஓர் எஜமான் அவனுடைய வேலைக்காரனுக்கு பத்தாயிரம் தாலந்து கடனை மன்னித்துவிடுகிறான். இந்த வேலைக்காரனுக்கு இன்னொரு வேலைக்காரன் 100 வெள்ளிக்காசு கடன்பட்டிருக்கிறான். இவன் அவனை மன்னிக்க மாட்டேன் என்கிறான். ஒரு தாலந்து என்பது ஒரு வேலைக்காரனுடைய 10 வருட சம்பளம் என்று நான் எங்கேயோ வாசித்த நினைவு இருக்கிறது. ஒரு வெள்ளிக்காசு என்பது ஒருநாள் சம்பளம். ஒருவன் பட்ட கடன் 100 நாள் சம்பளம். இன்னொருவன் பட்ட கடன் 10000 x 10 சமம் 1,000,00 வருடங்கள் அவன் வேலைசெய்தாலும் அவன் பட்ட கடனை அவனால் தீர்க்க முடியாது. அவன், அவனுடைய மனைவி, அவனுடைய பிள்ளைகள் எல்லாரையும் விற்றாலும்கூட அவனால் அவன் பட்ட கடனை அடைக்க முடியாது. அவனுடைய எஜமான் அவன் பட்டிருந்த 10000 தாலந்து கடனை அவனுக்கு மன்னித்து விடுகிறான். ஆனால், இவன் தனக்கு 100 வெள்ளிக்காசு கடன்பட்டவனின் கழுத்தை நெரித்து தன் கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தினான். ஒருவேளை 100 வெள்ளிக்காசு கடன்பட்டவன் கடன் கொடுத்தவனுடைய உடன் வேலைக்காரனாக இருக்கக்கூடும். அவன்மேல் நீதிமன்றத்தில் வழக்குப்போடுவதாக மிரட்டினான். முதல் வேலைக்காரன் இரண்டாவது வேலைக்காரன்மேல் எடுத்த நடவடிக்கை சரியா தவறா? சரி.

எந்த நீதிமன்றத்துக்குப் போனாலும் அவன் எடுத்த நடவடிக்கை செல்லும். "இவன் எனக்கு 100 வெள்ளிப்பணம் கடன்பட்டிருக்கிறான். எனவே, அவன் எனக்குப்பட்ட கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டும்." நீதிமன்றத்தில் இடஅமைப்பையெல்லாம் கேட்க மாட்டார்கள். "உன் மனைவி என்ன செய்கிறாள்? உன் பிள்ளைகள் படிக்கிறார்களா?" முதல் வேலைக்காரனைப் பார்த்து, "நீ யாரிட மாவது கடன் வாங்கியிருக்கிறாயா? நீ வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறாயா?" என் றெல்லாம் நீதிமன்றம் கேட்காது. நீதிமன்றம் இடஅமைப்பைப் பற்றியெல்லாம் கவலைப்படாது. "நீ கொலை செய்தாயா, இல்லையா?" அவ்வளவுதான். ஒருவேளை தற்காப்புக்காகக் கொலைசெய்திருக் கலாம். ஆனாலும், இடஅமைப்பைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படாது.

## தேவன் இருதயத்தைப் பார்க்கிறார்.

சட்டப்படி முதல் வேலைக்காரன் இரண்டாவது வேலைக்காரனை நடத்தியவிதம் சரி. சட்டம் என் பக்கம். ஆனால், தேவன் என் பக்கம் என்று சொல்ல முடியாது. அப்படியானால் தேவன் சட்டத்தின் பக்கம் இருக்க மாட்டாரா? இருப்பார் அல்லது இருக்கமாட்டார் என்று சொல்வதற்குப் பயமாக இருக்கிறது. தேவன் சட்டத்தின் பக்கம் இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை என்று தான் சொல்ல முடியும். தேவன் சட்டத்தின் பக்கம் இருக்க மாட்டார் என்று சொல்லத் துணிய மாட்டேன். ஆனால், இது சட்டப்படி சரியானது என்பதால் அல்லது இது சட்டப்பூர்வமானது என்ப தால் தேவன் அந்தப் பக்கம் இருக்கிறார் என்ற எந்த நிச்சயமும் இல்லை, எந்த உறுதியும் இல்லை.

அவர் தேவன், அப்படியானால் தேவன் சட்டத்தையெல்லாம் மதிக்கிறதில்லையோ என்று யாரும் நம்மைக் கேட்டுவிடக்கூடாது என்ற அர்த்தத்தில் சொல்லுகிறேன். "நான் சட்டவாதி கிடையாது. எனவே நான் சரியான காரியங்களைச் செய்ய மாட்டேன் என்று நாம் சொல்ல முடியுமா?" அப்படியல்ல.

ஆவிக்குரியவனும் சரியான காரியத்தைச் செய்கிறான். சட்டவாதியும் சரியான காரியத்தைச் செய்கிறான். இதுதான் சிக்கல். வெளிப்பார்வைக்கு இரண்டு சரிகளும் ஒரேமாதிரி தோன்றும். ஆவிக்குரியவனும் சரியானதைச் செய்கிறான். சட்டவாதியும் சரியானதைச் செய்கிறான். அப்படியானால் இரண்டும் சரிதானே என்று தோன்றும். இரண்டும் ஒன்றல்ல. புறம்பே பார்ப்பதற்கு இரண்டு பேரும் செய்வது ஒன்றுபோலத் தோன்றலாம். இரண்டு சரிகளும் ஒன்றுபோலத் தோன்றலாம். வெளியே அவை இரண்டும் ஒன்றுபோலத் தோன்றுகிறதே என்பதைக் கண்டு மனிதர்கள் வேண்டுமானால் பிரமிக்கலாம், மலைத்துப்போகலாம். ஆனால், தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். இரண்டு பேருமே சரியானதைத்தான் செய்கிறார்கள். ஆனால், எந்த இருதயத்திலிருந்து, எப்படிப்பட்ட ஆவியிலிருந்து, எந்த நோக்கத்தோடு அது செய்யப்படுகிறது என்பதை தேவன் பார்க்கிறார்.

## சட்டவாதியின் குணம்

சட்டவாதம் அல்லது சட்டவாதியின் குணம் என்னவென்று கேட்டால், "நான் செய்கிறது சரி. நான் பேசுகிறது சரி, நான் யோசிக்கிறது சரி. இது சரியில்லை என்று நீங்கள் நிரூபியுங்கள் பார்க்கலாம்." என்று வாதாடுவார்கள். லேவியராகமம் 10ஆம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் இருக்கிறது. அதை நான் வாசிக்க விரும்புகிறேன். ஆரோனுடைய இரண்டு குமாரர்களாகிய நாதாபும், அபியூவும் கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி, "நீ உன் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உன் வஸ்திரத்தைக் கிழிக்காமலும் இருப்பாயாக, உன் சகோதரராகிய இஸ்ரயேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக. நீ சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடார வாசலிலிருந்து புறப்படாதிருப்பாயாக," என்றான். அதாவது, "நீ ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தைக் கழற்றக்கூடாது. உன் உறவினர்கள் துக்கங்கொண்டாடலாம். ஆனால், நீ துக்கங்கொண்டாடக் கூடாது. ஆசரிப்புக் கூடாரத்தைவிட்டு வெளியே போகக்கூடாது," என்பதுதான் இதன் பொருள். ஆரோன் அதைக் கேட்டபோது அமைதலாயிருந்தான். மோசே சொன்னபடியே செய்தார்கள்.

மோசே சட்டவாதி என்று நாம் நினைக்கக்கூடும். அப்படி முடிவு செய்யாதீர்கள். சற்றுப் பொறுங்கள். அந்த அதிகாரத்தின் கடைசிப் பகுதிக்கு வரும்போது, ஒரு குறிப்பிட்ட பலியை ஆசாரியர்கள் அதே நாளில் சாப்பிட வேண்டும். இப்போது அவருடைய வேறு இரண்டு குமாரர்கள் அந்தப் பலியைச் செலுத்துகிறார்கள். பலி செலுத்தினபின், அவர்கள் அந்தப் பலியை எரித்துவிடுகிறார்கள். உடனே மோசே வந்து, "இந்தப் பலியை ஆசாரியர்கள் சாப்பிட வேண்டும். இந்தப் பலியை எரிக்கக்கூடாது," என்று கூறினார். அதற்கு ஆரோன், "இந்த சம்பவம் நடந்த இன்றைக்கே நானும் என் பிள்ளைகளும் கர்த்தருக்குமுன்பாக இந்தப் பலியை புசிப்பது நலமாயிருக்குமோ? ஆசாரியனுக்குரிய என் உடையை நான் கழற்றாமல் இருக்கலாம். ஆசரிப்புக்கூடாரத்துக்கு வெளியே நான் போகாமல் இருக்கலாம். ஆனால், என்னுடைய இரண்டு பிள்ளைகள் இன்றைக்கு இறந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நானும் என் பிள்ளைகளும் கர்த்தருக்குமுன்பாக இந்தப் பலியைப் புசிப்பது நன்றாயிருக்குமோ?" என்று கேட்டான். மோசே என்ன செய்தான் தெரியுமா? "மோசே அதைக் கேட்டபோது அமைதலாயிருந்தான்." மோசே சட்டவாதியா அல்லது கிருபை நிறைந்தவரா? நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த மோசே கிருபை நிறைந்தவர்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டம் சட்டமே. இந்தப் பாவநிவாரண பலியை ஆசாரியன் சாப்பிட்டிருக்க வேண்டும். நீங்கள் சாப்பிடாததால் கர்த்தருடைய சமுகத்திலிருந்து அக்கினி இறங்கி வந்து உன்னுடைய மற்ற இரண்டு பிள்ளைகளைப் பட்சிக்கும்," என்று மோசே சொல்லவில்லை. முதலாவது தேவன் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்தாரே! இரண்டாவது, ஏன் அவர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவில்லை? அவர் தேவன். "அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரயேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்," என்று சங்கீதம் 104:7 கூறுகிறது. லேவியராகமத்தில் உணர்ச்சிமிக்க இப்பேர்ப்பட்ட ஆவிக்குரிய சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. மோசேயின் வழிகள் சட்டத்தின் வழிகள் அல்ல. இஸ்ரயேல் மக்கள் தேவனுடைய புறம்பான கிரியைகளை

மட்டும் பார்த்தார்கள். ஆனால் மோசே தேவனுடைய உள்ளான வழிகளைப் பார்த்தார். மோசே கிருபை நிறைந்தவர் என்பதற்கு நான் இன்னொரு எடுத்துக்காட்டு கூறுகிறேன்.

"இந்த ஜனங்களைப் பார்த்தேன், இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்," என்று கர்த்தர் மோசேயிடம் கூறினார் *(யாத். 32:9, 10).*

இன்றைய ஓர் ஆவிக்குரிய தலைவனிடம் கர்த்தர் இப்படிப்பட்ட ஒரு வாக்குத்தத்தத்தைச் சொல்லி யிருந்தால் அடுத்த நாள் எப்படியிருந்திருக்கும்? "உங்களையெல்லாம் கர்த்தர் அழித்துப் போடுவ தாகவும், என்னை மட்டும் பெரிய ஆளாக மாற்றுவதாகவும் கர்த்தர் சொன்னார். நான் தான் உங் களுக்காகக் கர்த்தரிடம் மன்றாடினேன்," என்று சொல்லியிருப்பார். ஆனால், மோசே எப்படி ஜெபித் தார் தெரியுமா? "கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன? மலைகளில் அவர்களைக் கொன்றுபோடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர் களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்கு செய்யும்பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணி னார் என்று எகிப்தியர் சொல்வானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும். உமது தாசனாகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரயேலையும் நினைத்தருளும். உங்கள் சந்ததியை வானத்து நட்சத் திரங்களைப் போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே," என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான். மோசேக்கு தேவ னுடைய இருதயம் இருந்தது. "அவர்கள் உம்முடைய மக்கள் இல்லையா?" மோசே சட்டத்தைக் கொடுத்தவர்தானேதவிர மோசே சட்டவாதி அல்ல. எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா? அதைக் கேட்டபோது "அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு பரிதாபங்கொண்டார்" *(யாத். 32:14).*

தேவன் ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் கொடுத்த சட்டம் என்ன ஆவது? சட்டம் ஒன்று மில்லை. அதில் கிறிஸ்து இல்லையென்றால் சட்டம் எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும் அது ஒன்றுமில்லை. அது ஒரு பெரிய பூஜ்யம்.

## பவுலின் பயணம்

அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள அந்தக் கப்பல் கதையை நாம் மறுபடியும் மறுபடியும் வாசிக்க வேண்டும். முந்தைய இராத்திரியில் கர்த்தர் பவுலுக்குத் தோன்றி, "திடமனதாயிருங்கள்," என்று கூறி னார். இந்தக் கிருபையை அனுபவித்தவனால், அந்தக் கிருபையை மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க முடியாது. அவன் சட்டத்தை அனுபவித்தவன் என்றால், அவனால் மற்றவர்களுக்கு சட்டத் தைத்தான் கொடுக்க முடியும். "நீங்கள் நான் சொன்ன பேச்சைக் கேட்கவில்லை. எனவே, இப்படி நடைபெற்றது. நீங்கள் பிழைக்கமாட்டீர்கள்." சிலர் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள்காட்டி இப் படிச் சொல்வார்கள். "கர்த்தர் பாவங்களை மன்னித்தால் கூட, அவர் ஒன்றுமே செய்யாமல் விட மாட்டார்." இப்படிப்பட்ட வார்த்தைகள் சில சகோதர சகோதரிகளை சாகிறவரை சித்திரவதை செய்து கொண்டிருக்கும். "கர்த்தர் தாவீதை மன்னித்தார். ஆனாலும், அவர் ஒன்றும் செய்யாமல் விடவில் லையே?" என்று பேசுவார்கள். தேவன் ஏன் ஒருவனிடத்தில் ஒருமாதிரி நடக்கிறார். இன்னொருவனி டத்தில் வேறொருமாதிரி நடக்கிறார். ஏன்? இது நிலைமையைப் பொறுத்தது, அந்தஸ்தைப் பொறுத் தது. தாவீது செய்த பாவம் அந்தத் தேசம் முழுவதையும் பாதிக்கக்கூடியது. அதனால் தேவன் அவ னிடம் ஒரு குறிப்பிட்ட வகையில் நடந்துகொண்டார். தாவீதை நடத்தவேண்டிய விதம் வேறு. ஒரு சாதாரணமான என்னை நடத்த வேண்டிய விதம் வேறு. அவர் கிருபை நிறைந்தவர்.

## சட்டவாதத்தின் தன்மைகள்

### அன்பு இல்லாத போதனை

இரண்டாவது, சட்டவாதத்தின் சில முக்கியமான தன்மைகளைக் கூறுகிறேன். சத்தியம் கழித்தல் அன்பு சமம் எழுத்து. 2 கொரிந்தியர் 3ஆம் அதிகாரத்தில் நாம் இதைப் பார்க்கிறோம். ".. எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" *(2 கொரி. 3:6).* எழுத்து என்றால் என்ன? எழுத்து என் பது அன்பு இல்லாத சத்தியம். எழுத்து சத்தியத்துக்கு மிக நெருக்கமாக இருப்பதால், சத்தியத்திற்

கும் எழுத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நம்மால் பார்க்க முடியவில்லை. என்ன வித்தியாசம்? சத்தியம் எப்படிப் பிரயோகிக்கப்படுகிறது? அன்பினாலா அல்லது அன்பில்லாமலா? "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாகும்படியாக அப்படிச் செய்தார்" (எபே. 4:15). "அது அன்பினாலே தன்னைத்தானே கட்டியெழுப்புவதற்கேதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது" (வ. 16). 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிப் பேசுகிறார். 14ஆம் அதிகாரத்தில் அந்நிய பாஷை என்ற வரத்தையும், தீர்க்கதரிசன வரத்தையும்பற்றிப் பேசுகிறார். 12ஆம் அதிகாரததின் கடைசியில்... "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிப்பேன்," என்று கூறுகிறார். நடுவில் 13ஆம் அதிகாரத்தில் அன்பைப்பற்றிப் பேசுகிறார். நாம் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்மிடம் ஆவிக்குரிய வரங்கள் இருந்தாலும்கூட அதை எப்படி ஊழியஞ் செய்ய வேண்டும் தெரியுமா? அன்பினால்தான். நிறைய வரங்கள் இருக்கலாம். ஆனால், அன்பினாலே சேவிக்கவில்லையென்றால், பவுல் என்ன கூறுகிறார் தெரியுமா? அது ஒரு பெரிய பூஜ்யம். அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. "ஓ! என்னால் அதைச் செய்ய முடியும், என்னால் இதைச் செய்ய முடியும்! என்னால் மலைகளைப் பெயர்க்க முடியும்!" அன்பில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை.

## அன்பு இல்லாத வரம்

அடுத்த அற்றம் போதனை. ஒரு அற்றம் வரம். வரம் கழித்தல் அன்பு சமம் மரணம். போதனை கழித்தல் அன்பு சமம் மரணம். எழுத்தினால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று பவுல் சொல்லவில்லை. எழுத்து கொல்லும்.

மத்தேயுவில் ஆண்டவராகிய இயேசு இவ்வாறு கேட்கிறார்: "மனிதன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்பட்டானா? அல்லது ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதா?" மனிதனுக்காகத்தான் ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டது. பரிசேயர்கள் கொதித்துப்போயிருப்பார்கள். "ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்" (மத். 12:11). என்னுடைய ஆயிரம் ரூபாய் மதிப்புடையதா அல்லது ஒரு மனிதன் மதிப்புடையவனா? என்னுடைய 1000 ரூபாய் போனால் போய்விட்டுப் போகிறது. மனிதன் அதைவிட விலையேறப் பெற்றவன்.

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது என்னிடம் ஒரு கால்குலேட்டர் இருந்தது. என்னைக் கிறிஸ்துவுக்குள் நடத்திய ஒரு சகோதரர் அதை எனக்குத் தந்திருந்தார். என் அறையில் இருந்தவர் அதை வாங்கிப் பயன்படுத்தியபோது அது உடைந்துவிட்டது. நான் கிறிஸ்தவன். என் அறையில் இருந்தவர் கிறிஸ்தவர் இல்லை. இது உடைந்தது வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், இப்போது உடைந்த கால்குலேட்டர் முக்கியமா அல்லது என் அறையில் என்கூட வாழ்கிறவர் முக்கியமா? அதை என் நண்பர் ஒருவர் பழுதுநீக்கித் தருவதாக வாங்கிச்சென்றார். நான் படித்து முடிக்கும்வரை அதை அவர் கொண்டுவரவேயில்லை. மனிதன் முக்கியமா அல்லது ஓய்வுநாள் முக்கியமா? ஒரு மனிதன் முக்கியமா அல்லது உங்களுடைய ஆடு முக்கியமா? இந்தப் பரீட்சையைப் பயன்படுத்துவதற்கு நாம் பயப்படவே வேண்டாம்.

வேதாகமத்திலிருந்து இங்கு ஒரு வசனம், அங்கு ஒரு வசனம் என்று எடுத்து ஒரு புதிய உபதேசத்தை உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக, தடயவியல் நிபுணர்கள், உடைந்த ஒரு மண்டை ஓட்டின் துண்டுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து, "இவர்தான் மரித்துப் போனவர்" என்று கடைசியில் கூறுவார்கள். இதுபோல வேத வல்லுநர்கள் செய்வார்கள். இங்கிருந்து ஒரு துண்டு, அங்கிருந்து ஒரு துண்டு. இப்போது புதிதாக ஒன்றை உருவாக்கிவிடுவார்கள். இதுதான் சத்தியம் என்று கூறிவிடுவார்கள். தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சத்தியம். அல்லது கர்த்தர் சுகமாக்குகிறவர். இது மகிமையான சத்தியமா இல்லையா? சத்தியம். மனிதன் முக்கியமா அல்லது நீ கண்டுபிடித்த சத்தியம் முக்கியமா? அன்பு இல்லாத சத்தியம் வெறும் எழுத்து.

## குழு மனோபாவம்

குழு மனோபாவம் என்று ஒன்று உண்டு. என்னுடைய குழு பின்பற்றுகிற சத்தியத்தை நாம் பின்பற்றாவிட்டால் அந்தக் குழு நம்மை ஏற்றுக்கொள்ளாது. அந்தக் குழுவைத் திருப்திப்படுத்துவதற்காக, அந்தக் குழு நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் அன்பில்லாமல் சத்தியம் என்று போதிக்கிறதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். தாயும் தகப்பனும் மரிக்கிறார்கள். குழந்தைகள் அனாதைகளாகிவிடுகின்றன அல்லது பிள்ளைகள் மரித்துவிடுகிறார்கள். பெற்றோர்கள்

தவிக்கிறார்கள். ஆனால், இவர்களோ அன்பில்லாமல் சத்தியம் என்றழைக்கப்படுவதைப் பேசிக் கொண்டேயிருப்பார்கள். மனித உயிரின் மதிப்பென்ன? சனிக்கிழமை ஓய்வுநாள். அவர்கள் ஏழாவது நாளை ஓய்வுநாளாகக் கடைப்பிடிப்பவர்கள். சிலர் முதல் நாளை ஓய்வுநாளாகக் கடைப்பிடிப்ப வர்கள். இருவருக்கும் என்ன வித்தியாசம். இவர்கள் கடைப்பிடிக்கும் ஓய்வுநாளின் விளைவு என்ன? அது மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்கிறதா அல்லது மரணத்தைக் கொடுக்கிறதா?

சட்டவாதத்தைக் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக நாம் ஒருவரையொருவர் சேவிக்கிற விதம், ஒருவரோடொருவர் உறவுகொள்ளுகிற விதம் எப்படி இருக்க வேண்டும்? இரண்டு வேலைக்காரரகளைப்பற்றிய அந்த உவமையை நாம் மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டும். நாம் தேவனிடத்தில் கிருபையைப் பெற்றிருக்கிறோம். நாமும் மற்றவர்களுக்குக் கிருபை காட்ட வேண்டும். இல்லையென்றால் "'அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிற வர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தார்" (மத். 18:34).

இது சட்டப்படியானதா, இது செல்லுமா செல்லாதா, இதுதான் சத்தியமா? அப்படியல்ல. இதில் எவ்வளவு கிறிஸ்து இருக்கிறார். இதன்மூலம் எனக்குள் எவ்வளவு கிறிஸ்து வளர்கிறார்? இதன்மூலம் கிறிஸ்து மற்றவர்களுக்கு எவ்வளவு ஊழியஞ்செய்யப்படுகிறார்? பாவம் பெருகும்படிக்குக் கிருபை .. கிருபை கிருபை என்று சொல்வதைப்பார்த்தால் நாம் பாவம் செய்து கொண்டேயிருக்கலாம் என்று பொருளா? அப்படியல்ல. நமக்குள் கிறிஸ்து ஜீவிக்கிறார். நமக்குள் ஜீவப்பிரமாணம் இருக்கிறது. அவர் மிக உயர்ந்த சட்டத்தைவிட உயர்ந்தவர். கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். நம்மில் வாழ்கிற கிறிஸ்துவைவிட நமக்கு வெளியே இருக்கும் சட்டம் சிறந்த வேலையைச் செய்து விட முடியாது. நம்மில் வாழ்கிற கிறிஸ்துவைவிட வெளியே இருக்கிற சட்டம் சிறந்த வேலையைச் செய்துவிட முடியுமென்றால், புதிய ஏற்பாடு பொய்.